


**24.04.2025**

## தலைப்பு செய்திகள்

1. பெஹல்காம் தீவிரவாத தாக்குதல்  குற்றவாளிகள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி உறுதிபட தெரிவித்துள்ளார்.

2. பாதுகாப்பு நிலவரம் குறித்து விவாதிக்க அனைத்துகட்சி கூட்டத்திற்கு மத்திய அரசு இன்று அழைப்பு விடுத்துள்ளது.

3. சென்னையில் 40 கோடி ரூபாய் செலவில் UPSC போட்டித்தேர்விற்கான பயிற்சி மையம் ஏற்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. தமிழக பள்ளிக்கல்வி, உயர்கல்வி துறை மானியக்கோரிக்கை கொள்கை விளக்க குறிப்பு இன்று பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

5. ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் பெங்களூருவில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு – ராஜஸ்தான் ராயல்ஸை இன்று எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

### பிரதமர்

பெஹல்காம் தீவிரவாத தாக்குதல்  குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்கப்படும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி எச்சரித்துள்ளார்.

பீஹார் மாநிலம் மதுபானி-யில் 13 ஆயிரத்து 480 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பல்துறை வளர்ச்சி பணிகளை இன்று துவக்கிவைத்து பேசிய பிரதமர், பெஹல்காம் தீவிரவாதிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்தார்.

இந்த முடிவில் இந்திய தேசமே ஒருங்கிணைந்து உறுதியுடன் இருப்பதாக எடுத்துரைத்தார்.

இச்சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகள் அவர்களுக்கு துணை நிற்போர்  பூமியின் எப்பகுதியில் இருந்தாலும், அடையாளம் காணப்பட்டு கடும் தண்டனை வழங்கப்படும் என்றார்.

தீவிரவாதத்தால் இந்தியாவின் உணர்வை பிளவுபடுத்த முடியாது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

மனிதநேயத்தை நம்புவோர் அனைவரும் இந்தியாவுடன் நிற்பதாக கூறிய அவர்  இந்த துயரமான நேரத்தில் இந்தியாவிற்கு ஆதரவு அளிக்கும் பல்வேறு நாடுகள் மற்றும் அதன் தலைவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக கூறினார்.

பஹல்காம் சம்பவத்தில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதால் நாடு கவலையில் உள்ளதாகவும், உயிரிழந்தவர்கள் குடும்பங்களின் துயரத்தில்  தேச மக்கள் பங்கேற்றுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

தமது உரையை தொடங்குவதற்கு முன்னர் பிரதமர் பெஹல்காம் சம்பவத்தில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் சிறிது நேரம் பிரதமர் மௌன அஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்வின் ஒருபகுதியாக பிரதமர் பீகாரில் நமோ பாரத்,  அம்ரித் பாரத் விரைவு ரயில் சேவைகளையும் இன்று துவக்கிவைத்தார்.

************

**அனைத்து கட்சி கூட்டம்**

ஜம்மு காஷ்மீர் பெஹல்காம் தீவிரவாத தாக்குதலை அடுத்து நிலைமையை ஆராய மத்திய அமைச்சர்கள் திரு.அமித்ஷா, திரு.ராஜ்நாத்சிங் தலைமையில் புதுதில்லியில் இன்றுமாலை அனைத்து கட்சி கூட்டம் நடைபெறுகிறது.

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் பஹல்காம் தாக்குதல் குறித்து மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் பல்வேறு கட்சி தலைவர்களிடையே எடுத்துரைக்கிறார்.

பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சர் விவரிக்கிறார்.

இதனிடையே ஜம்முகாஷ்மீர் உத்தம்பூரில் பாதுகாப்பு படையினரின் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டதில் ஒரு பாதுகாப்பு வீரர் உயிரிழந்தார்.

தீவிரவாதிகள் **துது பஸந்த் கட்** பகுதியில் மறைந்திருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் நடைபெற்ற தேடுதல் வேட்டையின்போது மறைந்திருந்த தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டத்தில் இச்சம்பவம் நேரிட்டது.

************

**தீவிரவாதிகள் மோதல்**

சட்டிஸ்கட் தெலங்கானா எல்லை பகுதியில் பாதுகாப்பு படையினருக்கும் நக்சலைட் தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் 3 தீவிரவாதிகள் இன்று கொல்லப்பட்டனர்.

பீஜப்பூர் மாவட்ட மலைபகுதிகளில் நக்சலைட்டு அமைப்புகள் நடமாடுவதாக கிடைத்த தகவலை அடுத்து சட்டிஸ்கட் தெலங்கானா மஹாராஷ்டிரா மாநில பாதுகாப்பு படையினர் அப்பகுதியில் நடத்திய துப்பாக்கி சூட்டில் இம்மூவரும் உயிரிழந்தனர்.

************

**பாகிஸ்தான் தூதர் - சம்மன்**

இதனிடையே பாகிஸ்தான் தூதர் **சாத் - அஹமதிடம்,** பாகிஸ்தான் தன் நாட்டு தூதரை திருப்பி அழைத்துக்கொள்வதற்கான சம்மனை இந்தியா வழங்கியுள்ளது.

பெஹல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து மத்திய அரசு இந்நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

பாகிஸ்தானியர்களுக்கான சார்க் விசா நடைமுறையையும் இந்தியா ரத்து செய்துள்ளது.

************

**பிரபு தயால்**

இதனிடையே இந்தியா மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளால் பாகிஸ்தான் கடுமையாக பாதிக்கப்படும் என்று முன்னாள் இந்திய தூதர் திரு.பிரபு தயால் கூறியுள்ளார்.

சிந்து நதிநீர் பகிர்வு ஒப்பந்தம் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதால் அந்நாட்டின் வேளாண் பணிகளும்,

அட்டாரி வாஹா எல்லை மூடப்படுவதால் அந்நாட்டு மக்களும் பாதிக்கப்படுவார்கள் என்று கூறியுள்ளார்.

************

**காங்கிரஸ் காரிய கமிட்டி**

இந்நிலையில் புதுதில்லியில் இன்று நடைபெற்ற காங்கிரஸ் காரிய கமிட்டி கூட்டத்தில் பெஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

தீவிரவாதத்திற்கு எதிராக அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட உறுதி ஏற்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே,

காங்கிரஸ் நாடாளுமன்ற குழு தலைவர் திருமதி சோனியாகாந்தி,

மக்களவை எதிர்கட்சி தலைவர் திரு.ராகுல்காந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தோருக்கு உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

************

**நெல்லூர் - அஞ்சலி**

தூத்துக்குடி நாமக்கல் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் பெஹல்காம் சம்பவத்தில் உயிரிழந்தோருக்கு பிஜேபி சார்பில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

முன்னதாக இச்சம்பவத்தில் உயிரிழந்த ஆந்திர மாநிலம் நெல்லூரை சேர்ந்த மதுசூதனன் ராவ்-ன் உடல் இன்று சென்னை விமான நிலையம் வந்தடைந்த போது மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் சார்பில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பிஜேபி மாநில தலைவர் **திரு.நயினார் நாகேந்திரன்,**

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு.செல்வபெருந்தகை உள்ளிட்டோரும் மரியாதை செலுத்தினர்.

பின்னர் அவரது உடல் நெல்லூருக்கு கொண்டு செல்லப்பட்டது.

************

**முதலமைச்சர் - கவன ஈர்ப்பு**

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் நகரில் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் பெயரில் பல்கலைகழகம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று இதுதொடர்பாக சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தில் பேசிய முதலமைச்சர் இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

************

**முதலமைச்சர்**

சென்னை ஷெனாய் நகரில் 500 மாணவர்கள் தங்கி பயிலும் வகையில் 40 கோடி ரூபாய் செலவில் அனைத்து நவீன வசதிகளுடன் யு.பி.எஸ்.சி. போட்டி தேர்விற்கான பயிற்சி மையம் அமைக்கப்படும் என்று, **முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின்** அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இதனை தெரிவித்த அவர், நடப்பாண்டு தமிழ்நாட்டிலிருந்து நான் முதல்வன் திட்டத்தில் பயிற்சி பெற்ற 50 பேர் உட்பட, 57 பேர் யு.பி.எஸ்.சி. தேர்வில் தேர்ச்சிய பெற்றுள்ளதாக கூறினார்.

************

**அன்பில் மகேஷ்**

தமிழ்நாட்டில் வரும் கல்வியாண்டில் மாற்று திறனாளி மாணாக்கருக்கான உட்கட்டமைப்பு வசதிகள் பள்ளிகளில் ஏற்படுத்தி தரப்படும் என்று, மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் **திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி** தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில், தமது துறை மானியக் கோரிக்கை மீதான கொள்கை விளக்க குறிப்பில் இதனை தெரிவித்த அவர், பேராசிரியர் கல்வி மேம்பாட்டு திட்டத்தின்கீழ், 3 ஆயிரத்து 527 கோடி ரூபாய் மதிப்பில் 8 ஆயிரத்து 306 வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளதாகவும், 4 ஆயிரத்து 412 வகுப்பறைகள் கட்டப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

11, 12-ம் வகுப்பு கணினி அறிவியல் மாணாக்கரிடம் தனிக்கட்டணமாக வசூலிக்கப்படும் 200 ரூபாய் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

கடந்த மார்ச் ஒன்றாம் தேதிமுதல் இன்றுவரை அரசு பள்ளிகளில் ஒரு லட்சத்து 56 ஆயிரத்து 290 மாணாக்கர் சேர்ந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

************

**ச.பே–கொள்கைவிளக்க குறிப்பு**

**தமிழ்நாட்டில்** தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்படும் சிறப்பு பயிலகங்களில் புதிய பட்டப்படிப்புகள், வரும் கல்வியாண்டுமுதல் துவங்கப்பட உள்ளதாக, மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் **திரு.கோவி.செழியன்** தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று தமது துறை மானியக் கோரிக்கை மீதான கொள்கை விளக்க குறிப்பில் இதனை தெரிவித்த அவர், 54 அரசு பல வகை தொழில்நுட்ப கல்லூரிகள், 2 ஆயிரத்து 783 கோடி ரூபாய் மதிப்பில் திறன்மிகு மையங்களாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

************

**கேள்வி நேரம்**

கடலூர் மாவட்டத்தில் சுமார் 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நீர்நிலைகளை ஆழப்படுத்தி கரைகளை பலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர் நிரந்தர வெள்ள தடுப்பு பணிகளுக்காக 6 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெறுவதாக குறிப்பிட்டார்.

**வாய்ஸ்**

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது வெளியான மேலும் சில தகவல்கள்**

கோவை மாவட்டத்தில் அனைத்து பகுதி மக்களுக்கும் சீரான குடிநீர் வழங்கும் பணிகளை அரசு மேற்கொண்டு வருவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்தார்.

பில்லூர் 3ஆம் கட்ட திட்டப்பணிகள் விரைவில் முடிவுற்றதும் அப்பகுதிக்கு சீரான குடிநீர் வழங்கப்படும் என்றார்.

**தமிழகத்தில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்** மூலம் விடுபட்ட ஊராட்சிகளுக்கு நூலகங்கள் அமைக்கப்படும் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி தெரிவித்துள்ளார்.

இதன்படி சோழிங்கநல்லூர் தொகுதி புனித தோமையார்மலையில் 7 ஊராட்சிகளில் நூலகம் அமைக்கப்படுவதாக குறிப்பிட்டார்.

**சென்னை பூந்தமல்லி தொகுதி** நஸரத்பேட்டை – திருமலிகை தேசிய நெடுஞ்சாலை சந்திப்பில் ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாலம் அமைக்க மத்திய அரசின் அனுமதி கிடைத்த பின்னர் பணிகள் தொடங்கப்படும் என்று பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு தெரிவித்தார்.

**சீர்காழி தொகுதி கீழமூவர்கரை மீனவ** கிராமத்தில் மத்திய அரசின் ஒப்புதலும் நிதியும் கிடைத்த பின்னர் அப்பகுதியில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் ஏலம் மற்றும் உலர்கூடங்கள் அமைக்கப்படும் என்று மாநில மீன்வளத்துறை அமைச்சர் திரு.அனிதாராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

மயிலாடுதுறை கடலோர மீனவ கிராமப்பகுதிகளில் உரிய ஆய்விற்கு பின்னர் மீன்பிடி துறைமுகம் தூண்டில் வளைவு ஆகியவை ஏற்படுத்தப்படும் என்றார்.

**சென்னை சட்டக்கல்லூரி திருவள்ளூர்** மாவட்டம் பட்டரை பெரும்பாக்கம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் புதுப்பாக்கம் ஆகிய இடங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டது ஒரு நபர் கமிஷன் அறிக்கை அடிப்படையிலானது என்று சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

தற்போது சென்னை சட்டக்கல்லூரி உயர்நீதிமன்ற கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டு 29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அப்பகுதிகளில் 9 நீதிமன்றங்கள் வர இருப்பதாகவும் கூறினார்.

**தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில்** புதிதாக தொழிற்சாலைகள் அமைகிறதோ முன்னுரிமை அடிப்படையில் அங்கு துணை மின் நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் மின்சாரத்துறை அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

**தமிழ்நாட்டில் இந்தாண்டு 2 ஆயிரம்** மூத்த குடிமக்கள் முருகன் திருக்கோவில்களுக்கு ஆன்மீக பயணம் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருவதாக மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பு கூறியுள்ளார்.

**பொதுவிநியோக கடைகளில் கைரேகை பதித்து** பொருட்கள் பெறுவதில் உள்ள தாமதத்தை களைய அரசு உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக உணவுத்துறை அமைச்சர் திரு.சக்கரபாணி கூறினார்.

கைரேகை சரியாக பதிவாகாத பட்சத்தில் கண் கருவிழி மூலமும் அடையாளம் பார்த்து பொருட்கள் வழங்கப்படுவதாக கூறினார்.

************

**தர்மபுரி – வாய்ஸ்**

நம்மை பற்றி மட்டும், சிந்திக்காமல், சமூகத்தை பற்றியும் சிந்திப்பதற்கு புத்தக வாசிப்பு பெரிதும் பயன்படுவதாக, தர்மபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு. சதீஷ்** தெரிவித்துள்ளார்.

உலக புத்தக தினத்தையொட்டி, தர்மபுரி மாவட்ட விளையாட்டரங்கில் புத்தக வடிவில் ஆயிரம் மாணாக்கர் பங்கேற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் இன்று பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

**---- வாய்ஸ் ----**

************

**இருவரி**

**கோடை விடுமுறையை ஒட்டி நெல்லை** மாவட்டம் களக்காடு தலையணை பகுதிக்கு சுற்றுலா பயணிகள் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**நீலகிரியில் வரையாடு கணக்கெடுக்கும் பணிகள்** இன்று தொடங்கின.

வரும் 27ஆம் தேதிவரை இப்பணிகள் நடைபெறும்.

**ராமநாதபுரம் தேனி திருவள்ளூர்** கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நாளை நடைபெறுகிறது.

**திருப்பத்தூர் மாவட்டத்தில் தனியார் துறை** வேலை வாய்ப்பு முகாம் நாளை நடைபெற உள்ளது.

************

**சூரிய பூஜை - வாய்ஸ்**

கும்பகோணம் நாகேஸ்வரர் ஆலயத்தில் இன்று நடைபெற்ற சூரிய பூஜையில் ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம் மேற்கொண்டதாக எமது தஞ்சை செய்தியாளர் தெரிவிக்கிறார்.

--- வாய்ஸ் ----

************

**கிரிக்கெட்**

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் பெங்களூருவில் இன்றிரவு ஏழரை மணிக்கு ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு – ராஜஸ்தான் ராயல்ஸை எதிர்கொள்கிறது.

************

**மகளிர் கிரிக்கெட்**

சர்வதேச மகளிர் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டி கொழும்புவில் வரும் ஞாயிற்றுக்கிழமை தொடங்குகிறது.

இந்தியா - தென்னாப்பிரிக்கா - இலங்கை அணிகள் இதில் பங்கேற்கின்றன.

முதல் போட்டியில் இந்தியா - இலங்கையை எதிர்கொள்கிறது.

************